# கரூர் நகராட்சி
# கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2020ம் ஆண்டு ஜீலை 06ம் நாள் திங்கட்கிழமை மாலை 4.25மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற அவசரக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1)செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, (நீர்வள ஆதாரத்துறை) அமராவதி வடிநிலக்கோட்டம், தாராபுரம் அவர்களின் கடித எண்.வப/வஅ–2/கோ–5/2020, நாள்.30.06.2020–ல் மாவட்ட ஆட்சியர், கரூர் அவர்களின் ந.க.எண்.அ1/3926/2020, நாள்.20.03.2020 கடிதத்தின்படி, இக்கோட்டத்தின் கீழ் உள்ள அமராவதி ஆற்றில் பள்ளபாளையம் அணைக்கட்டிலிருந்து பிரியும் இடது கரை வாய்க்கால் சரகம் 28.600 கி.மீல் பிரியும், அரளிக்கொத்து வாய்க்காலானது கடந்த 10 ஆண்டுகளாக பாசனத்திற்கு பயன்படாமல் தூர்ந்து கழிவுநீர் வாய்க்காலாக மாறி இருப்பதாலும், இந்த அரளிக்கொத்து வாய்க்கால் மூலம் பாசனம் பெற்ற 17.89 ஏக்கர் பாசன நிலங்கள் அனைத்து வீட்டுமனைகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ள காரணத்தினாலும், அரசுக்கு சொந்தமான வாய்க்கால் புறம்போக்கினை தனிநபர் எவரும் ஆக்கிரமிப்பு செய்யாதவாறும், பொதுமக்கள் நலன் கருதியும் முறையாக வாய்க்காலினை பராமரிக்க வேண்டிய அத்தியாவசிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பதால், மேற்குறிப்பிடப்பட்ட புல எண்கள் (L.N.S.கிராமம் புல எண்.287 மற்றும் 372) வழியே செல்லும் அரளிக்கொத்து கிளை வாய்க்காலை பராமரிக்கும் பொருட்டு அரசாணை எண்.277 (நகராட்சி நிர்வாகம்), நாள்.17.11.1997ன்படி கரூர் நகராட்சியின் பொறுப்பில் ஒப்படைக்க மாவட்ட ஆட்சியர், கரூர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளார். அதனை தொடர்ந்து தலைமைப்பொறியாளர், பொபகு/நீ.ஆ.து., கோயமுத்தூர் மண்டலம், கோவை அவர்களது கடிதத்தில், மேற்படி வாய்க்காலை அரசாணை எண்.277 (நகராட்சி நிர்வாகம்), நாள்.17.11.1997ன்படி கரூர் நகராட்சி வசம் பராமரிப்புக்கு ஒப்படைக்க ஏதுவாக கரூர் நகராட்சி தனது பராமரிப்பின் கீழ் மேற்படி அரளிக்கொத்து வாய்க்காலை எடுத்துக்கொள்ள நகர்மன்ற தீர்மானம் / நகராட்சி கேட்பு கடிதம் கோரப்பட்டுள்ளது. எனவே, மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளபடியும், தலைமைப்பொறியாளர், பொபகு/நீ.ஆ.து., கோயமுத்தூர் மண்டலம், கோவை அவர்களின் கடிதத்தின்படியும் மேற்படி அரளிக்கொத்து வாய்க்கால் பாசனத்திற்கு பயன்படாமல் தூர்ந்து கழிவுநீர் வாய்க்காலாக மாறியிருப்பதால் பொதுமக்களின் நலன் கருதி முறையாக வாய்க்காலை பராமரிக்க எல்.என்.எஸ்.கிராமம், புல எண்.287 விஸ்தீரணம் ஹெக்டேர் 0.24.00 ஏர்ஸ் ‘‘வாய்க்கால்’’ அரசு புறம்போக்கு எனவும், புல எண்.372 விஸ்தீரணம் ஹெக்டேர் 0.28.50 ஏர்ஸ் வாய்க்கால் அரசு புறம்போக்கு எனவும் கிராம ஆவணங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாய்க்காலினை நகராட்சியின் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள இசைவு தெரிவிக்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>
மன்றம் அனுமதிக்கலாம். (2876 /2020/எப்1)

தீர்மான எண்.2264 அனுமதிக்கப்பட்டது.

2)கரூர் நகராட்சியுடன் இனாம்கரூர் நகராட்சி, தாந்தோணி நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி ஆகியவை ஒன்றாக இணைக்கப்பட்டு நகராட்சி எல்லை விரிவாக்கம் செய்து 48 வார்டுகளுடன் 53.26சதுரகி.மீட்டர் பரப்பளவுடன் ஒருங்கிணைக்கப்பட்ட பெரு நகராட்சியாக 25.10.2011 முதல் செயல்பட்டு வருகின்றது. நகராட்சியின் மக்கள் தொகை 2011–ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 2,14,412 ஆகும். கரூர் நகராட்சி பகுதியானது மாவட்ட தலைநகரமாகவும், தொழில் நகரமாகவும் திகழ்ந்து வருகிறது. மேலும் கரூர் நகராட்சியானது மாநிலத்தின் மையப்பகுதியாக உள்ளதால் அனைத்து மாவட்டத்திலிருந்தும் பொதுமக்கள் வந்து செல்லும் நகரமாக உள்ளது. நகரில் 1236 எண்ணிக்கையிலான தெருக்கள் மற்றும் சாலைகள் 328.841கி.மீட்டர் அளவில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சிக்கு அருகில் உள்ள 5 ஊரக பஞ்சாயத்துகளின் மொத்த மக்கள் தொகை 49,859 ஆகும்.

கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 48 வரை உள்ள பகுதிகளில் உள்ள 67436 குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், அன்றாடம் நகரப்பகுதிக்குள் வந்து செல்லும் வெளியூர் பொதுமக்கள் மற்றும் இதர வணிக பயன்பாடுகள் ஆகியவற்றின் மூலம் தினந்தோறும் சராசரியாக 71மெட்ரிக் டன் சேகரமாகும் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. சேகரிக்கப்படும் குப்பைகளில் 41 மெட்ரிக் டன் மக்கும் குப்பைகளை பிரித்து நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நுண்ணுயிர் உரகிடங்கு மையங்களிலும், 24.50ஏக்கர் பரப்பளவில் உள்ள நகராட்சி சொந்தமான உரக்கிடங்கில் இயந்திரங்களுடன் அமைக்கப்பட்ட திடக்கழிவு செயலாக்க மையம் (Processing Unit) ஆகியவற்றின் மூலம் குப்பைகளை மறுசுழற்சி செய்யப்படுகிறது. மேலும் 20 மெட்ரிக் டன் மக்காத கழிவுகள் அழிப்பதற்கான அமைப்பு இல்லாத காரணத்தினால் அரியலூரில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலைக்கு கொண்டு செல்லப்படுவதால் நகராட்சியின் மூலம் அதிக செலவினம் மேற்கொள்ளப்படுகிறது.

கரூர் நகராட்சிக்கு அருகில் உள்ள சின்னடாங்கோவில் கிழக்கு ஊராட்சி, சின்னடாங்கோவில் மேற்கு ஊராட்சி, காதப்பாறை ஊராட்சி, மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சி மற்றும் ஆத்தூர் பூலாம்பாளையம் ஊரராட்சிகளையும் இத்திட்டத்தின் மூலம் சேர்ந்து செயல்படுத்த உள்ளன. அதன்படி 2011ம் ஆண்டு கணக்கீட்டின்படி 19,729 மக்கள் தொகை கொண்ட சின்னடாங்கோவில் கிழக்கு ஊராட்சியிலும், 6,038 மக்கள் தொகை கொண்ட சின்னடாங்கோவில் மேற்கு ஊராட்சியிலும், 9,875 மக்கள் தொகை கொண்ட காதப்பாறை ஊராட்சியிலும், 9,031 மக்கள் தொகை கொண்ட மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சியிலும் மற்றும் 5,186 மக்கள் தொகை கொண்ட ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சிகளையும் சேர்த்து ஆக மொத்தம் தினசரி சேகரமாகும் 5மெட்ரிக் டன் மக்காத திடக்கழிவுகளையும், நகராட்சி பகுதிகளில் சேகரிக்கப்படும் 20 மெட்ரிக் டன் மக்காத திடக்கழிவுகளையும் ஆக மொத்தம் 25 மெட்ரிக் டன் மக்காத திடக்கழிவுகளை நவீன முறையில் அப்புறபடுத்த 25 மெட்ரிக் டன் கொள்ளளவு நவீன எரியூட்டும் இயந்திரம் (INCINERATION PLANT) கரூர் நகராட்சிக்கு சொந்தமான வாங்கல் சாலையில் சர்வே எண்.976ல் அமைந்துள்ள உரக்கிடங்கு பகுதியில் அமைப்பதற்கு ரூ.1.60கோடி மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட கருத்துருவிற்கு Design, Build, Operate and Transfer (DBOT) முறையில் நவீன எரியூட்டும் இயந்திரம் அமைப்பதற்கு உரிய நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி உரிய கருத்துருக்களை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதி அளிக்கலாம் (இ1/1143/2020)

தீர்மான எண்.2265 அனுமதிக்கப்பட்டது.

3)அரசாணை (எம்.எஸ்) எண்.82 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ.II) நாள்.23.08.2018ன்படி ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2018 –2019ன் கீழ் கரூர் நகராட்சி லட்சுமிராம் தியேட்டர் பின்புறம் முதல் காமதேனு நகர் வரை மழை நீர் வடிகால் அமைக்கும் பணி ரூ.362.00 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு உரிய தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு பணியினை மேற்கொள்ள ஐந்தாவது அழைப்பில்தான் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பணியினைத் தொடங்குவதற்கான பூமி பூஜையின் போது வருகை புரிந்த மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் அவர்கள் ஏற்கனவே அதே பகுதியில் Channel வடிவமைப்பில் அமைக்கப்பட்டுள்ள வடிகாலின் உள்ளே பொதுசுகாதாரப் பணியாளர்கள் நான்தோறும் இறங்கி சுத்தம் செய்ய இயலாமல் வடிகால் நீர் தேங்கி பொதுசுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. எனவும், ஏற்கனவே அனுமதி பெறப்பட்டுள்ள திறந்த வெளியிலான Channel Type

வடிவமைப்பினை மாற்றி வடிகாலின் கொள்ளளவு மாறாத வகையில் வடிகாலின் மொத்த அகலத்தின் ஒரு பகுதியில் U வடிவிலான RCC வடிகால் அமைத்து சுகாதார சீர்கேடு ஏற்படாவண்ணம் வடிகாலின் மேல் RCC Slab அமைத்து எஞ்சியுள்ள பகுதியில் சுகாதார சீர்கேடு மற்றும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாவண்ணம் சிமெண்ட் கான்கீரிட் அமைத்தும் அதில் வடிகாலை சுத்தம் செய்வதற்கு ஏற்றவாறு வழிவகை செய்யுமாறும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மேற்கண்டவாறு பணிகளை மேற்கொள்ள Institute of road Transport Technology colleges (IRTT) ஈரோடு அவர்களிடமிருந்து பெறப்பட்ட திருத்திய வடிவமைப்பின்படி (Structural Design) திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் அசல் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள 1700 மீட்டருக்கு பதிலாக தற்போது 620 மீட்டர் நீளத்திற்கு மட்டும் மேற்கண்ட வடிவமைப்பின்படி இப்பணியினை அசல் ஒப்பந்ததாரர் மூலமாக வரப்பெற்றுள்ள ஒப்பந்த விலை விகிதத்தின் அடிப்படையில் மேற்கொள்ளவும் மற்றும் திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறுவதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்கள் மூலமாக கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்.2266 அனுமதிக்கப்பட்டது.

**4)**கரூர் நகராட்சியானது வளர்ந்து வரும் பெருநகராட்சியாக உள்ளதால் தற்போது கரூர், இனாம்கரூர் மற்றும் தாந்தோணி ஆகிய பகுதிகளில் குடிநீர் அபிவிருத்தி பணிகளின்போது சாலைகள் தோண்டப்பட்டு குடிநீர் விநியோக குழாய்கள் பதிக்கப்பட்டதாலும், தற்போது வழங்கப்பட்டு வரும் புதைவடிகால் மற்றும் குடிநீர் வீட்டிணைப்புகள் வழங்கும் பணிகளில் முடிக்கப்பட்ட பகுதிகளில் சாலைகள் மிகவும் பழுதடைந்து பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் பழுதடைந்துள்ள சாலைகளை புதிதாக தார் சாலைகளாக அமைக்க ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (IUDM) 2020–2021ம் ஆண்டின்கீழ் ரூ.178.00லட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்டுள்ள பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. பணிகளின் விவரம் பின்வருமாறு

| வ எண் | பணியின் விவரம் | நீளம் (மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.8, 9, 10 மற்றும் 11க்குட்பட்ட திட்ட சாலை மெயின் ரோடு அபிவிருத்தி செய்யும் பணி | 670.00 | 7.00 | 50.00 |
| 2 | வார்டு எண்.11 பாலகிருஷ்ணா நகர் சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 640.00 | 5.00 | 34.00 |
| 3 | வார்டு எண்.44 பாரதிதாசன் நகர் குறுக்கு தெருக்களில் உள்ள சாலைகளை அபிவிருத்தி செய்யும் பணி | 1500.00 | 4.00 | 49.00 |
| 4 | வார்டு எண்.47முத்தலாடம்பட்டி முதல் எஸ்.பி.ஆபீஸ் வரை உள்ள சாலைகளை அபிவிருத்தி செய்யும் பணி | 1200.00 | 4.50 | 45.00 |
| | மொத்தம் | 4.010 கி.மீ., | | 178.00 |

மேற்படி பழுதடைந்த சாலைகளை அபிவிருத்தி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.178.00லட்சத்தினை ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (IUDM) 2020–2021ம் ஆண்டின்கீழ் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து தருமாறும், இப்பணிகளுக்கான நிர்வாக அனுமதி வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/3009/2020)

தீர்மான எண்.2267 அனுமதிக்கப்பட்டது.

**5)**கரூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணிக்காக அனைத்து வார்டுகளிலும் உள்ள தெருக்கள், பொது இடங்கள், அரசு அலுவலகங்கள், சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொதுகழிப்பிடங்கள் மற்றும் பொது இடங்கள் ஆகிய பகுதிகளில் கிருமி நீக்கம் செய்ய லைசால் 2000லிட்டர் உடனடியாக வாங்க அனுமதி அளிக்கப்பட்டதன்பேரில் 12.05.2020ம் தேதியில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் (ஒரு லிட்டருக்) |
|---|---|---|
| 1. | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், 60/101,ஏ/பி.நெ.6 ஆர்.எஸ்.பில்டிங், குளக்கரை தெரு, காமராஜ் நகர், நாமக்கல் | ரூ.249.76 ஜிஎஸ்டி உட்பட |
| 2. | ஸ்ரீஅக்ஷயா டிரேடர்ஸ் 4/10 கிழக்கு சாயப்பட்டரை தெரு, வாரியூர், திருச்சி | ரூ.255.00 ஜிஎஸ்டி உட்பட |
| 3 | ஸ்ரீநவலடி அசோசியேட்ஸ் 82, மாரியம்மன் கோவில் தெரு பரமத்தி வேலூர், நாமக்கல் மாவட்டம் | ரூ.257.60 ஜிஎஸ்டி உட்பட |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள ஸ்ரீகாளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். **(1605/2020/எச்1)**

தீர்மான எண்.2268 அனுமதிக்கப்பட்டது.

**6)**கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவாமல் தடுக்கும் பணிக்காக அனைத்து வார்டுகளிலும் உள்ள தெருக்கள், பொது இடங்கள், அரசு அலுவலகங்கள் சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொது கழிப்பிடங்கள் மற்றும் பொது இடங்கள் ஆகிய பகுதிகளில் கிருமி நீக்கம் செய்ய பிளீச்சிங் பவுடர் 5 மெட்ரிக்டன் உடனடியாக வாங்க அனுமதி அளிக்கப்பட்டதன் பேரில் 12.05.2020ம் தேதியில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் ஒரு டன்னுக்கு |
|---|---|---|
| 1. | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், 60/101,ஏ/பி.நெ.6 ஆர்.எஸ்.பில்டிங், குளக்கரை தெரு, காமராஜ் நகர், நாமக்கல் | ரூ.62720 ஜிஎஸ்டி உட்பட |
| 2. | ஸ்ரீ அக்ஷயா டிரேடர்ஸ், 4/10.கிழக்கு சராயபட்டரை தெரு, வாரியூர், திருச்சி | ரூ.63200 ஜிஎஸ்டி உட்பட |
| 3. | ஸ்ரீ நவலடி அசோசியேட்ஸ், 82.மாரியம்மன் கோவில் தெரு, பரமத்தி வேலூர், நாமக்கல் மாவட்டம் | ரூ.63840 ஜிஎஸ்டி உட்பட |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். **(1605/2020/எச்1)**

தீர்மான எண்.2269 அனுமதிக்கப்பட்டது.

7)கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவாமல் தடுக்கும் பணிக்காக அனைத்து வார்டுகளிலும் உள்ள தெருக்கள், பொது இடங்கள், அரசு அலுவலகங்கள் சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொது கழிப்பிடங்கள் மற்றும் பொது இடங்கள் ஆகிய பகுதிகளில் கிருமி நீக்கம் செய்ய நீர்த்த சுண்ணாம்பு தூள் 10 மெட்ரிக்டன் உடனடியாக வாங்க அனுமதி அளிக்கப்பட்டதன் பேரில் 12.05.2020ம் தேதியில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் ஒரு டன்னுக்கு |
|---|---|---|
| 1. | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன்,<br>60/101,ஏ/பி.நெ.6 ஆர்.எஸ்.பில்டிங்,<br>குளக்கரை தெரு, காமராஜ் நகர், நாமக்கல் | ரூ.12320<br>ஜிஎஸ்டி உட்பட |
| 2. | ஸ்ரீ அக்ஷயா டிரேடர்ஸ்,<br>4/10.கிழக்கு சராயபட்டரை தெரு, வாரியூர், திருச்சி | ரூ.12500<br>ஜிஎஸ்டி உட்பட |
| 3. | ஸ்ரீ நவலடி அசோசியேட்ஸ்,<br>82.மாரியம்மன் கோவில் தெரு, பரமத்தி வேலூர்,<br>நாமக்கல் மாவட்டம் | ரூ.12600<br>ஜிஎஸ்டி உட்பட |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள ஸ்ரீகாளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (1605/2020/எச்1)

தீர்மான எண்.2270 அனுமதிக்கப்பட்டது.

8)கரூர் நகராட்சிக்கு சொந்தமான பொறியர் பிரிவு ஈப்பு வாகன எண்.TN 47 AH 8887க்கு பாலம்மாள்புரம் இரயில்வே அடி பாலத்தில் தேங்கியுள்ள மழைநீரால் கட்டுபாட்டை இழந்து பாலகட்டையில் இடித்து சேதாரமாகிய முன்பக்க பம்பர் மற்றும் முன்பக்க கண்ணாடியுடன் 1,00,000 கி.மீ., துாரத்திற்கான அட்டவணை பராமரிப்பு பணிகள் செய்து முடிக்க MAHINDRA & MAHINDRA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் பணிமனை M/s SHIVA AUTOMOBILES (P) LTD., KARUR நேரிடையாக பெறப்பட்ட விலைப்புள்ளி ரூ.70,788/–யினை ஏற்று M/s SHIVA AUTOMOBILES (P) LTD., KARUR நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும், இதற்குண்டான செலவுத் தொகை ரூ70,788/– குடிநீர் நிதியில் செலவினம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)தேசிய பேரிடர் மற்றும் ஊரடங்கு உத்திரவு நடைமுறை உள்ள காலத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக பயன்படும் ஈப்பு வாகன எண். TN 47 AH 8887க்கு 1,00,000 கி.மீ., துாரத்திற்கு மராமத்து மற்றும் பம்பர் ரிப்பேர் பணிகள் செய்து முடிக்க ரூ.70,788/– குடிநீர் நிதியில் செலவினம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

3)அரசின் உச்ச வரம்புக்கு மேல் உள்ள கூடுதல் செலவின தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/6703/2019)

தீர்மான எண்.2271 அனுமதிக்கப்பட்டது.

9)கரூர் நகராட்சியின் கணிணி மெசின்களுக்கு தேவையான டோனர்கள் உபகரணங்கள் 01.04.2020 முதல் 31.03.2021 முடிய ஓராண்டிற்கு வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.20,00,000/–க்கு (ரூபாய் இருபது லட்சத்திற்கு மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம். (பி7/2846/2020)

தீர்மான எண்.2272 அனுமதிக்கப்பட்டது.

10)கரூர் நகராட்சியின் அலுவலக உபயோகத்திற்கு மற்றும் அனைத்து வசூல் மையங்களுக்கும் பண மதிப்புள்ள ரசீதுகள், படிவங்கள் மற்றும் பதிவேடுகள், எழுதுபொருட்கள் மற்றும் தேர்தல் பணியினை எதிர்நோக்கியும் பொருட்கள் வாங்க 2020–2021ம் ஆண்டிற்கு அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனங்களில் வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.20,00,000/–க்கு (ரூபாய் இருபது லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம். (பி7/2845/2020)

தீர்மான எண்.2273 அனுமதிக்கப்பட்டது.

11)நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5437/2020–10/J1 நாள்.09.04.2020ல் நகராட்சிகளில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சறிக்கை நடவடிக்கையாக முகவுறை, கையுறை, முழு உடல் கவசம், காலுறை மற்றும் ஊட்டச்சத்துக்கள் வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க கரூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 48 வார்டுகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து பணியாளர்களுக்கு 7710 எண்ணம் முகயுறை பொது சுகாதார அவசர அவசியம் கருதி வாங்கி வழங்க சுகாதார ஆய்வாளர் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை மேற்கொள்வதற்காக அனைத்து பணியாளர்களுக்கு 7710 எண்ணம் முகயுறை(N95 Mask) கொள்முதல் செய்வதற்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட விதி 1920 பிரிவு–15ன் கீழ் ரூ.12.00 லட்சத்தில் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் மேற்கண்ட முகவுறை (N95 Mask) தேவையான 7710 எண்ணம் கொள்முதல் செய்ய 22.06.2020ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | முகவுறை (N95 Mask) (GST உட்பட) ஒன்றுக்கு |
|---|---|---|
| 1) | Chutti Garments, 177, Allwin Nagar, Covai Road, Karur | ரூ.147.00 |
| 2) | Bag Nation. 32/51, 3rd cross, Ramakrishnapuram East. Karur | ரூ.162.75 |
| 3) | AgathyaZ Enterprises, 11 Palaniyappa Nagar, Rayanoor, Karur | ரூ.173.25 |

மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Chutti Garments, Karur நிறுவனத்தின் விலை விபரம் உள்ளூர் மார்க்கெட் விலைவிபரத்திற்கு ஏற்ப இருப்பதால் பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான முகவுறை (N95 Mask) 7710 எண்ணம் கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண். 3336/ஜே2/2020–8 நாள்.02.04.2020ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது அதனடிப்படையில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுப்பு நடவடிக்கை ஏற்படுத்திட மேற்கண்ட முகவுறை (N95 Mask) கொள்முதல் செய்து அதற்கு செலவினத்தொகை ரூ.11,33,370/–ஐ தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து கொரோனா வைரஸ் தடுப்பு நிதி அல்லது பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (1605/2020/எச்1)

தீர்மான எண்.2274 பதிவு செய்யப்பட்டது.

12)நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 06.03.2020ந் தேதி ஆய்வு கூட்டத்தில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தபட்டுள்ளதற்கிணங்க கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கும் பணிக்காக அனைத்து வார்டுகளிலும் உள்ள அனைத்து கழிப்பிடங்கள், சமுதாய கழிப்பிடம், பொதுகழிப்பிடம், அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுஇடங்கள் ஆகிய பகுதிகளில் கிருமி நீக்கம் செய்யும் பணிக்கு தேவையான கீழ்க்கண்ட பொருட்களை சப்ளை செய்யும் பணிக்கு 12.05.2020ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண் | பொருளின் விவரம் | தேவையான அளவு |
|---|---|---|
| 1 | லைசால் | 1400 லிட்டர் |
| 2 | பிளிச்சிங் பவுடர் | 5டன் |
| 3 | நீர்த்த சுண்ணாம்புத் தூள் | 10டன் |

மேற்படி பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு

| வ. எண் | பொருட்களின் விவரம் | விலை விகிதம் | Saram Enviro Services Pvt Ltd., Chennai. | Sri Akshaya Traders 4/10 East Sarayapattarai Street, Woraiyur, Trichy. | Sri Navaladi Associates 82, Mariyamman Kovil Street, Paramathi Velur Namakkal (DT) |
|---|---|---|---|---|---|
| 1 | லைசால் 10% | லிட்டர் ஒன்றுக்கு | ரூ.249.76 ஜிஎஸ்டி உட்பட | ரூ.255 ஜிஎஸ்டி உட்பட | ரூ.257.60 ஜிஎஸ்டி உட்பட |
| 2 | பிளிச்சிங் பவுடர் | டன் ஒன்றுக்கு | ரூ.62720 ஜிஎஸ்டி உட்பட | ரூ.63200 ஜிஎஸ்டி உட்பட | ரூ.63840 ஜிஎஸ்டி உட்பட |
| 3 | நீர்த்த சுண்ணாம்பு தூள் | டன் ஒன்றுக்கு | ரூ.12320 ஜிஎஸ்டி உட்பட | ரூ.12500 ஜிஎஸ்டி உட்பட | ரூ.12600 ஜிஎஸ்டி உட்பட |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Saram Enviro Services Pvt Ltd.,Chennai நிறுவனத்தின் விலைவிபரம் உள்ளூர் மார்க்கெட் விலை விபரத்திற்கு ஏற்ப இருப்பதால் பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான மேற்கண்ட கிருமி நாசினி பொருட்களை கொள்முதல் செய்து அதற்கு செலவினத்தொகை ரூ.7,86,464/—ஐ பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதித்து கொரோனா வைரஸ் தடுப்பு நிதி அல்லது பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (1605/2020/எச்1)

தீர்மான எண்.2275 பதிவு செய்யப்பட்டது.

13) கரூர் நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அலுவலகத்தின் இயற்பியல் ஆய்வகம் முன்புறம் உள்ள இரு புங்கன் மரங்கள் அகற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொதுஏலம் 19.06.2020ம் தேதி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் வரப்பெறவில்லை. மேலும் பொதுஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விவரம் பின்வருமாறு

1)திரு.பி.நல்லுசாமி, கரூர் ரூ.950/—
2)திரு.டி.சிவக்குமார், கரூர் ரூ.960/—
3)A Sun Power Engineers, Karur ரூ.1050/—

மேற்படி பொதுஏலத்தில் அதிகபட்சமாக ஏலத் தொகையாக A Sun Power Engineers, Karur அவர்கள் ரூ.1050/– கோரியுள்ளார்கள். ஆதலால் மேற்படி நிறுவனத்திற்கு நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அலுவலகத்தின் இயற்பியல் ஆய்வகம் முன்புறம் உள்ள இரு புங்கன் மரங்களை அகற்றுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அலுவலகத்தில் இயற்பியல் ஆய்வகம் முன்புறம் உள்ள இரு புங்கன் மரங்களை அகற்றுவதற்கு A Sun Power Engineers, Karur அவர்களுக்கு அதிகபட்ச ஏலத் தொகை ரூ.1050/– நகராட்சி கருவூலகத்தில் செலுத்திய பின் பணி உத்திரவு வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/1598/2020)

தீர்மான எண்.2276 அனுமதிக்கப்பட்டது.

14)கரூர் நகராட்சியில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி திட்டம் 2018–2019ன்கீழ் ரூ.18.00கோடி மதிப்பீட்டில் கரூர் இரயில் நிலையம் முதல் தேசிய நெடுஞ்சாலை எண்.7 வரை இணைக்கும் அம்மா சாலை அமைக்கும் பணியானது ஒப்பந்ததாரர் மூலம் பணி நடைபெற்று வருகிறது.

மேற்படி இடத்தில் பெரியகுளத்துபாளையம் குகை வழிப்பாதையின் தென்பகுதியில் புதிதாக அமைக்க உத்தேசிக்கப்பட்ட சாலையில் ஏற்கனவே உள்ள 5 மின்கம்பங்களை இடம் மாற்றி புதிதாக சாலையில் 10மின்கம்பங்கள் அமை.து தருமாறு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் கரூர் அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேற்படி மின்கம்பங்களை இடம் மாற்றி அமைப்பதற்காக மதிப்பீடு கட்டணம் ரூ.6,58,500/– செலுத்துமாறு உதவி பொறியாளர், இயக்கலும், பராமரிப்பும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், கரூர் மேற்கு கரூர் அவர்களின் கடிதம் நாள்.12.06.2020ல் தெரிவிக்கப்பட்டது.

ஆதலால் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், கரூர் அவர்களுக்கு ரூ.6,58,500/–யை செலுத்தியதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

<u>அலுவலகக் குறிப்பு</u>
1)மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2)மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.6,58,500/–யை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (இ1/7170/2017)

தீர்மான எண்.2277 அங்கீகரிக்கப்பட்டது.

15)கரூர் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020–2021 ஆண்டின்கீழ் கரூர் நகராட்சிக்கு மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் மற்றும் கரூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரை செய்த கீழ்கண்டுள்ள பணிகளுக்கு கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர் அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.அ3/1194/2020 நாள்.25.06.2020ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மாவட்ட விளையாட்டு அரங்கில் R.O. குடிநீர் வசதி ஏற்படுத்துல் | 1.50 |
| 2 | வார்டு எண்.12 எஸ்.பி. காலனி கிழக்கு, கொங்கு நகர் 3வது கிராஸ் பகுதியில் புதிய போர்வெல் அமைத்து மினி பவர் பம்ப் அமைத்தல் | 3.75 |
| | மொத்தம் | 5.25 |

அலுவலகக் குறிப்பு
மன்றம் பதிவு செய்யலாம். (இ1/2270/2020)

தீர்மான எண்.2278 பதிவு செய்யப்பட்டது.

16)பஞ்சமாதேவி கிராமம் வாங்கல் சாலையில் உள்ள இரண்டு நகராட்சி உரக்கிடங்குகளில் நீண்டகாலமாக கொட்டப்பட்டுள்ள குப்பைகளை அப்புறப்படுத்தி நிலத்தினை மீட்டெடுக்கும் பணிக்கு (Bio-Mining) ரூ.933.00இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து அரசாணை எண்.36 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.22.02.2019ன்படி தூய்மை இந்தியா திட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி இடத்திற்கு மும்முனை மின்இணைப்பு வழங்குவதற்கு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் கரூர் அவர்களிடம் விண்ணப்பம் அளிக்கப்பட்டது. அதன்படி இரண்டு நகராட்சி உரக்கிடங்குகளில் மும்முனை மின்இணைப்பு வழங்குவதற்கு CC Deposit Rs.57600/- Development charges Rs.96000/- ஆக மொத்தம் ரூ.1,53,600/– செலுத்துமாறு உதவி செயற்பொறியாளர் இயக்கலும், பராமரித்தலும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் வாங்கல் அவர்களின் கடித ந.க.எண்.Lr.No.AE/O&M/UGL/F.APP.Tracking/D.No.36/2020 Dated.26.06.2020 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆதலால் மேற்படி இடத்தில் மும்முனை மின்இணைப்பு வழங்குவதற்குரிய கட்டணம் ரூ.1,53,600/–யை பணிகளின் அவசர அவசியம் கருதி நகராட்சி விதிகள் சட்டம் 15ன்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் விதி எண்.15ன்கீழ் பொது நிதியில் செலவினம் மேற்கொண்டதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(இ1/4804/2018)

தீர்மான எண்.2279 பதிவு செய்யப்பட்டது.

17) கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு ஈப்பு எண்.TN 47 AL 6227 க்கு கிளட்சியில் பழுது பணிகள் செய்யவும், சுகாதார அவசர பணிக்காக வாகனம் தேவை என்பதால் வாகனத்தின் அவசர அவசியத்தை முன்னிட்டு தமிழ்நாடு நகராட்சி சட்ட விதி 1920 பிரிவு 15ன்கீழ் ஆணையர் அவர்களின் 27.04.2020 அன்று அனுமதி பெற்று TATA ACE நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் அவர்களின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் CM MOTORS KARUR நிறுவனத்தின் மூலம் நேரடி விலைப்புள்ளி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதற்கும், பணி மேற்கொண்டமைக்கான பட்டியல் தொகை ரூ.6400/– தமிழ்நாடு நகராட்சிகள் சட்ம் 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதித்து நகராட்சி பொது நிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (1956/2020/எச்5)

தீர்மான எண்.2280 பதிவு செய்யப்பட்டது.

18)கரூர் நகராட்சி பொறியாளர் பிரிவு ஈப்பு வாகன எண். TN 47 AB 7476 க்கு ஆயில் சர்வீஸ் மற்றும் மராமத்து பணிகள் செய்யவும் ஆணையாளர் அவர்களின் அவசர பணிக்காக வாகனம் தேவை என்பதால் வாகனத்தின் அவசர அவசியத்தை முன்னிட்டு தமிழ்நாடு நகராட்சி சட்டவிதி 1920 பிரிவு 15ன்கீழ் ஆணையர் அவர்களின் 28.05.2020 அன்று அனுமதி பெற்று MAHINDRA AND MAHINDRA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் அவர்களின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் M/S SHIVA AUTO MOBILES PVT., LTD., கரூர் நிறுவனத்தின் மூலம் நேரடி விலைப்புள்ளி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதற்கு பணி மேற்கொண்டமைக்கான பட்டியல் தொகை ரூ.31374.96 தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதித்து குடிநீர் நிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**2)**அரசின் உச்சவரம்புக்கு மேல் செலவாகும் கூடுதல் செலவினத் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். **(8709/2019/எச்5)**

தீர்மான எண்.**2281** பதிவு செய்யப்பட்டது.

**19)** கரூர் நகராட்சி பொறியாளர் பிரிவு ஈப்பு வாகன எண். TN 47 AH 6364 க்கு ஆயில் சர்வீஸ் மற்றும் மராமத்து பணிகள் செய்யவும் வாகனம் அவசர பணிக்காக தேவை என்பதால் வாகனத்தின் அவசர அவசியத்தை முன்னிட்டு தமிழ்நாடு நகராட்சி சட்ட விதி **1920** பிரிவு **15**ன்கீழ் ஆணையர் அவர்களின் **15.06.2020** அன்று அனுமதி பெற்று MAHINDRA AND MAHINDRA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் அவர்களின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் M/S SHIVA AUTO MOBILES PVT., LTD., கரூர் நிறுவனத்தின் மூலம் நேரடி விலைப்புள்ளி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதற்கும், பணி மேற்கொண்டமைக்கான பட்டியல் தொகை ரூ.**34757/–** தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **15**ன்கீழ் அனுமதித்து குடிநீர் நிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

**1)**பொறியாளர் பிரிவு ஈப்பு எண்.TN 47 AH 6364 க்கு ஆயில் சர்வீஸ் மற்றும் மராமத்து பழுதுகள் சரி செய்ய Mahendra And Mahendra என்ற நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் Shiva Auto Mobiles Pvt Ltd வரப்பெற்ற மதிப்பீட்டு பட்டியல் ரூ.**34,757/–** ஐ ஏற்று வேலை வழங்கவும் குடிநீர் நிதியில் பட்டியல் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**பொறியாளர் பிரிவு வாகனத்தின் அவசர அவசியத்தை முன்னிட்டும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட விதி **1920** பிரிவு **15**ன் கீழ் ஆணையர் அவர்களிடம் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**3)**அரசின் உச்சவரம்புக்கு மேல் செலவாகும் கூடுதல் செலவினத் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். **(2061/2019/எச்5)**

தீர்மான எண்.**2282** பதிவு செய்யப்பட்டது.

**20)**கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான வாகன எண்.TN47 AF 4927க்கு இஞ்சின் பகுதியில் தண்ணீர் இறங்குவது பழுதுகள் சரிசெய்யும் பணிக்கு டாடா நிறுவன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற CM மோட்டார்ஸ் நிறுவனம் கரூர் நிறுவனத்திடமிருந்து நேரடியாக பெறப்பட்ட விலைப்புள்ளி விவரம் உள்ளூர் சந்தை விலை விவரத்திற்கு ஏற்ப இருப்பதால் மேற்படி விலைப்புள்ளியினை ஏற்று அவரது நிறுவனத்தின் மூலம் பணியினை செய்து முடிக்கவும் இதற்கான செலவினம் ரூ.**21031/–** வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

**1)**மேற்படி வாகனத்தின் பழுது பணியினை மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்களின் முன் அனுமதியுடன் சி.எம். மோட்டார்ஸ் நிறுவனத்தில் நேரடியாக பெறப்பட்ட விலைப்பட்டியலின் விலை விவரம் உள்ளூர் சந்தை விலை விபரத்திற்கு ஏற்ப இருப்பதினால் பணியின் அவசர அவசியம் கருதி விலைப் பட்டியலினை ஏற்று பணியினை செய்து முடிக்கவும், அதற்கான வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**மேற்படி பணிக்கு செலவினத் தொகை ரூ.**21031/–** நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**3)**அரசின் உச்சவரம்புக்கு மேல் செலவாகும் கூடுதல் செலவினம் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். **(1855/2020/எச்1)**

தீர்மான எண்.**2283** அனுமதிக்கப்பட்டது.

**21)**கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**01** கே.ஏ., நகர் மற்றும் கோதுார் முதல் கோதை நகர் ரோட்டிற்கு வடபுறம் பகுதியில் புதிய தெருவிளக்கு அமைத்து தருமாறு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.**2175/2020/**இ**3** நாள்.**09.06.2020** மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அனுப்பியமைக்கு மின்வாரியத்திடம் இருந்து வரப்பெற்ற மதிப்பீட்டு பட்டியல் நாள்.**28.06.2020**ன்படி தொகை ரூ.**85,698/–**யை மின்வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணி மேற்கொள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.85,698/—யை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம். (2175/2020/இ3)

தீர்மான எண்.2284 அனுமதிக்கப்பட்டது.

22)கரூர் நகராட்சியில் உள்ள ஒரு முதுநிலை நகரமைப்பு அலுவலர் பணியிடத்தை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ரூ.மு.எண்.12949/2017/டிபி1 நாள்.13.06.2018ல் 01.10.2019 முதல் 30.09.2017 வரை நீடித்து வைத்துக் கொண்டதற்கு பின்னேற்பு வழங்கியும் மற்றும் 01.10.2017 முதல் 30.09.2018 வரை மேற்படி முதுநிலை நகரமைப்பு அலுவலர் பணியிடத்தினை நீடித்து வைத்துக் கொள்ள அனுமதியும், 01.10.2018 முதல் 30.09.2019 வரை ஓராண்டு காலம் நீடித்து வைத்துக் கொள்ளவும் அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

மேலும் ஒரு முதுநிலை நகரமைப்பு அலுவலர் பணியிடத்தை 01.10.2019 முதல் 30.09.2020 வரை நிரந்தரமாக நீடித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுமதி கோரி கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளது.

தற்பொழுது 30.09.2020ம் தேதியுடன் முதுநிலை நகரமைப்பு அலுவலர் பணியிடத்திற்கான நீட்டிப்பு காலம் முடிவடைவதால் இப்பணியிடத்தின் அவசியம் கருதி இந்நகராட்சியுடன் தாந்தோணி நகராட்சி, இனாம்கரூர் நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி இணைக்கப்பட்டு தற்பொழுது 53.26சதுர கிலோமீட்டர் பரப்பளவில் கரூர் நகராட்சி விரிவாக்கம் பெற்று செயல்பட்டு வருவதாலும், நகரமைப்பு திட்டங்கள் மற்றும் வரன்முறைப்படுத்தும் திட்டங்களை கண்காணித்து அனுமதி வழங்கும் பொருட்டு இந்நகராட்சிக்கு நிரந்தர முதுநிலை நகரமைப்பு அலுவலர் பணியிடம் அவசியமாக தேவை என்பதால் முதுநிலை நகரமைப்பு அலுவலர் பணியிடத்தினை 01.10.2010 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
மன்றம் அனுமதிக்கலாம். (சி1/2942/2009)

தீர்மான எண்.2285 அனுமதிக்கப்பட்டது.

23)கரூர் நகராட்சி வார்டு எண்.36 சணப்பிரட்டி பகுதிக்குட்பட்ட வடக்கு காந்திகிராமம் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள மாவட்ட அரசு மருத்துவமனை (ம) மருத்துவ கல்லூரிக்கு, தாந்தோணி பகுதி குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் பதிக்கப்பட்ட குடிநீர் விநியோக குழாயிலிருந்து தனியாக குடிநீர் விநியோக குழாய் அமைத்து Bulk Water supply Service connection கொடுக்க கேட்பு தொகை ரூ.8,20,000/— செலுத்த தெரிவிக்கப்பட்டதின் பேரில், வைப்புத் தொகை ரூ.4,05,000/— ரசீது எண். 082/01/2/20—21/0000255, நாள். 11.05.2020, மதிப்பீட்டு கட்டணம் ரூ.3,65,000/— ரசீது எண்.082/01/2/20—21/0000856, நாள்.11.05.2020 மற்றும் குடிநீர் கூடுதல் வைப்புத் தொகை ரூ.50,000/— ரசீது எண். 082/01/2/20—21/0000257, நாள்.11.05.2020 ஆக மொத்தம் ரூ.8,20,000/— செலுத்தப்பட்டுள்ளது. எனவே மருத்துவ கல்லூரிக்கு குடிநீர் வழங்க அம்மன் நகர் பகுதியிலிருந்து மருத்துவ கல்லூரிக்கு 90mm PVC குடிநீர் விநியோக குழாய் அமைத்தல் மற்றும் நீர்த்தேக்க தொட்டியிலிருந்து 5 எச்.பி Open well Submersible Motor மற்றும் 90mm PVC குடிநீர் விநியோக குழாய்கள் பொருத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.65 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.3.65 இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ2/2062/2018)

தீர்மான எண்.2286 அனுமதிக்கப்பட்டது.

24)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு–9 திட்ட சாலை வார்டு–12 அண்ணா சாலை வடக்கு கோரி அருகில் மற்றும் அருகம்பாளையம் ரோடு லட்சுமி நகர் வரை உள்ள பகுதியில் புதிய தெருவிளக்கு அமைத்து தருமாறு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2175/2020/இ3 நாள்.09.06.2020 மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விண்ணப்ப கடிதம் அனுப்பியமைக்கு மின்வாரியத்திடம் இருந்து வரப்பெற்ற மதிப்பீட்டு பட்டியல் நாள்.03.07.2020ன்படி தொகை ரூ.6,51,756/–யை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்ப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணி மேற்கொள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.6,51,756/–யை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம். (இ3/2020)

தீர்மான எண்.2287 அனுமதிக்கப்பட்டது.

25)கரூர் நகராட்சி இனாம்கரூர் பகுதிக்கான குடிநீர் விநியோகத் திட்டத்தில் பொருத்தப்பட்டுள்ள Sluice Valveக்கு தொட்டிக்கு அமைக்கப்படாமல் உள்ளது. இதுபோல் 10இடங்களில் பொருத்தப்பட்டுள்ள Sluice Valveகளுக்கு தொட்டி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.50இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2)மேற்படி பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.50இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/3106/2020)

தீர்மான எண்.2288 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
கரூர் நகராட்சி